No. of Printed Pages : **4**

501622 2017

**6927**

Register Number

**Second Year**

# சமூக அறிவியல் கற்பித்தல்

# TEACHING OF SOCIAL SCIENCE

(Tamil Version)

நேரம் : 3 மணி　　　　　　　　　　　　　மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

## பாடப்பொருள்

**I.** (அ) அனைத்து வினாக்களுக்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

**1.** குடிசைத் தொழில் என்றால் என்ன ? உதாரணம் தருக.

**2.** பருவக்காற்றின் சூதாட்டம் என்றால் என்ன ?

**3.** வேற்றுமையில் ஒற்றுமை – குறிப்பு வரைக.

**4.** எழுத்தறிவின்மைக்கு காரணங்களாக நீ கருதுபவை யாவை ?

**5.** வேலை வாய்ப்பின்மையை போக்கும் வழிமுறைகள் யாவை ?

**6.** வளிமண்டலத்திலுள்ள வானிலையின் கூறுகளை எழுதுக.

**7.** கடல் நீரின் அசைவுகள் எத்தனை ? அவை யாவை ?

[ Turn over

8. நீர் சுழற்சி – குறிப்பு வரைக.

9. காடுகள் அழிவதற்கான முக்கியக் காரணங்களை குறிப்பிடுக.

10. இயற்கை நிகழ்வுகளால் காற்று எவ்வாறு மாசுபடுகிறது ?

## கற்பிக்கும் முறை

(ஆ) அனைத்து வினாக்களுக்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**10x2=20**

11. இணையவழி கற்பித்தல் அணுகுமுறையில் எவ்வாறு மதிப்பீடு செய்யலாம் ?

12. ''சமூக அறிவியலும், இணைய வழி கற்பித்தலும்'' – குறிப்பு வரைக.

13. சமூக அறிவியல் பாடத்தில் கதை சொல்லும் முறையில் கற்பிக்கக்கூடிய பாடத் தலைப்புகள் ஏதேனும் நான்கினைக் கூறுக.

14. புவியில் இரவு - பகல் ஏற்படுவதை துணைக்கருவிக் கொண்டு எவ்வாறு கற்பிப்பாய் ?

15. அறிவியல் சிந்தனை தூண்டல் முறையில் 'தொகுத்தல்' எவ்வாறு இருக்க வேண்டும் ?

16. குரல் அடிப்படையிலான நாடக வகையினை விளக்குக.

17. 'நாடகம்' என்பதன் பொருள் என்ன ?

18. பணிமனையின் போது மாதிரிகள் தயாரிக்க நாம் என்ன மாதிரியானப் பொருட்களை பயன்படுத்த வேண்டும் ?

19. பருவத்தேர்வின் இலக்குகள் யாவை ?

20. மதிப்பீட்டு நுணுக்கத்தின் நோக்கங்களை எழுதுக.

## பகுதி - ஆ

### பாடப்பொருள்

II. (அ) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 5x4=20

21. உலோக வளங்களின் வகைகளை விளக்குக.

22. வேளாண்மையின் முக்கியத்துவத்திற்கான காரணங்கள் யாவை ?

23. குழந்தைகள் கைவிடப்படுவதற்கான காரணங்கள் யாவை ?

24. சமுதாயத்தில் வேலை வாய்ப்பின்மைக்கு காரணங்களாக நீ கருதுபவை யாவை ?

25. ''புவியின் மேற்பரப்பின் வெப்பநிலை இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.'' ஏன் ? ஏதேனும் இரண்டிற்கு விளக்கம் தருக.

26. காற்றழுத்த மண்டலங்களை விளக்கி எழுதுக.

27. இயற்கை வளங்கள் என்றால் என்ன ? அவற்றைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை ?

28. மனிதனால் உருவாக்கப்படும் பேரிடர்கள் யாவை ? விளக்குக.

### கற்பிக்கும் முறை

(ஆ) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளி. ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 5x4=20

29. இணையவழி கற்றல் அணுகுமுறையில், ''வகுப்பறை கற்பித்தல்'' கற்றலின் செயல்பாடுகள் யாவை ?

30. இணையவழி கற்றலின் இணைய ஆதாரங்கள் ஏதேனும் எட்டினை எழுதுக.

31. புராணக் கதைகள் மூலம் நாம் கற்றுக் கொள்ளக் கூடிய மனிதப் பண்புகள் யாவை ? ஏதேனும் இரு எடுத்துக்காட்டுகள் தருக.

32. சமூக அறிவியல் பாடத்திற்கு பொருத்தமாக, களிமண் மற்றும் காகிதக்கூழ் பயன்படுத்தி தயாரிக்கக்கூடிய மாதிரிகளை பட்டியலிடுக.

33. அறிவியல் சிந்தனை தூண்டல் முறையில் ''பிரச்சனையை உற்றுநோக்கலும், விவரித்தலும்'' என்ற படிநிலையை விளக்குக.

34. நாடக முறையில் நினைவிற் கொள்ள வேண்டியவைகள் யாவை ?

35. நடித்தல் முறையின் படிநிலைகளை விளக்குக.

36. ''நமதுபுவி'' என்ற பாடத்தலைப்பை எவ்வாறு நடிப்பதற்கு ஏற்றப் பகுதியாக வடிவமைப்பாய் ?

## பகுதி - இ

**III.** **இரண்டு** வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **500** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி.

**2x10=20**

37. (அ) கதை சொல்லும் முறையின் சிறப்பியல்புகளைத் தகுந்த எடுத்துக் காட்டுகளுடன் விவரி.

**அல்லது**

(ஆ) கற்பித்தல் கற்றல் துணைக்கருவிகள் தயாரித்தல் மற்றும் பயன்பாட்டின் அவசியத்தை பணிமனையின் மூலம் மாணவர்களிடம் எவ்வாறு விளக்கலாம் ?

38. (அ) அறிவியல் சிந்தனை தூண்டல் முறையின் படிநிலைகளை ஏழாம் வகுப்பு புவியியல் பாடப்பகுதியில் ஏதேனும் ஒரு பாடத்தினை எடுத்துக்கொண்டு விளக்குக.

**அல்லது**

(ஆ) மதிப்பீட்டு உத்திகளில் ''வினாத்தாள் வடிவமைப்பு தயாரித்தல்'' முறையை விவரித்து எழுதுக.

-o0o-